4. சென்னை கோட்டை இராணுவ முகாம் பகுதியில் பெயர்ப் பலகையில் தமிழ் எழுத்துக்கள் அழிக்கப்பட்டிருத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததற் கிணங்க பேரவைக்கு ஒரு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம் வழுதி அவர்கள் இந்தக் கோட்டை இராணுவ முகாம் பகுதியில் ஒரு பெயர்ப் பலகையில் தமிழ்ப் பெயர் அழிக்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு பிரச்சனையைப் பேரவையில் எழுப்பினார்கள். அதனை எழுத்து மூலம் தலைவருக்குத் தந்தால், அது பற்றி உரிய நிலை மைகளை அறிந்து இந்த அவைக்கு அறிவிப்பதாக அப்போது பேரவைத் தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த வகை யில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம் வழுதி அவர் களும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங் கம் அவர்களும் அந்தப் பிரச்சனை பற்றி உரிய நிழற்படங் களோடு மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு விண்ணப்பித்துக் கொண்டார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதனை என்னிடம் தந்தார்கள். அது பற்றிய நிலைமைகளை அறிந்து, விவரங்களைத் தெரிவிக்குமாறு நான் கோட்டையில் ''தமிழ்நாடு அண்ட் கேரளா சப் ஏரியா ஹெட் குவார்ட்டர்ஸ்'' தலைமை அதிகாரியாக இருக்கின்ற லெப்டினன்ட் கர்னல் ஆர். செல்வநாதன் அவர்களிடம் கேட்டேன். அதற்கான விளக்கத்தினை அவர்கள் தந்திருக்கிறார்கள்.

கோட்டையில் இப்படிப்பட்ட பெயர்ப் பலகைகள் இருக் கின்றன. இந்தக் கோட்டை முழுவதும் ஒரு காலத்தில் இராணு வத்திற்குச் சொந்தம் என்றாலும் இப்போது தலைமைச் செயலகம் இருக்கின்ற பகுதி முழுவதும் தமிழக அரசுக்குச் சொந்தம். மற்ற பகுதிகள் இராணுவத்திற்குச் சொந்தம். அந்தப் பகுதி இந்தக் கோட்டைக்குள் உட்பட்டிருக்கிற ஒரு பகுதியாகும். அந்தப் பகுதியில் இருக்கின்ற கட்டிடங்களைக் குறிக்கின்ற வகையில் ஆறு இடங்களில் பெயர்ப் பலகைகள் இருக்கின்றன. அவை வழிகாட்டி பெயர்ப் பலகைகளாக இருக் கின்றன. அதாவது 'தமிழ்நாடு அண்ட் கேரளா சப் ஏரியா' அலுவலகம் எங்கே இருக்கிறது என்பதைத் தெரிவிப்பதற்காக ஆறு இடங்களில் ஆறு பெயர்ப் பலகைகள் வைக்கப் பட்டிருக் கின்றன. அந்த ஆறு இடங்களைப் பற்றிய படங்களையும் அவர்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள். அந்த ஆறு இடங் களிலும் தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளி லும் பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே தமிழை அழிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை என்றும், அவை பல ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்டவை என்றும், மழை, வெயில், காற்று போன்ற இயற்கைச் சூழல்களால் பெயர்

சில இடங்களில் அழிந்து, சிதைந்து இருக்கிறது என்றும் அதனை மாற்றி எழுத இராணுவத் துறை அலுவலகம் நடவடிக்கை எடுத்து இப்போது மாற்றி எழுதிக்கொண்டு வருகிறார்கள் என்றும், மாற்றி எழுதும்போது இந்தியை எழுதுவதற்கு ஒரு பெயின்டர் என்றும், ஆங்கிலத்தை எழுதுவதற்கு ஒரு பெயிண்டர் என்றும், தமிழை எழுதுவதற்கு ஒரு பெயின்டர் என்றும் நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்.

மேலும், இந்தியை எழுதியவர் அதனை எழுதிக்கொண்டு போய்விட்டார் என்றும், ஆங்கிலத்தை எழுதியவர் அதனை எழுதிக்கொண்டு போய்விட்டார் என்றும், தமிழை எழுதியவர் அதனை மெதுவாக எழுதிக்கொண்டு வந்தார் என்றும், ஐந்து இடங்களில் முழுமையாக எழுதப்பட்டுவிட்டது என்றும் ஒரு இடத்தில் தமிழில் எழுதப்படுவதில் தாமதம் ஏற்பட்டது என்றும், அதன் காரணமாக அது தார் வைத்து அழிக்கப்பட்டது என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது என்றும், அப்படிப்பட்ட எண்ணம் எங்களுக்கு இல்லை என்றும் கூறியிருக்கிறார்கள்.

இது பாதுகாப்புக்கு உட்பட்ட இடம். ஆகவே, மூன்று மொழிகளிலும் பெயர்ப் பலகைகளைப் புதுப்பிக்க எண்ணுகிறோமே தவிர வேறு எந்த எண்ணமும் இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், இராணுவத்துறையைப் பொறுத்த வரையில் இந்தி, ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளே இருந்தாலும் தமிழக அரசு பின்பற்றுகின்ற ஒரு கொள்கையாலும், இராணுவத்துறையின் இந்தப் பிரிவு தமிழ் நாட்டிலே இருப்பதாலும் முதல் பெயர் தமிழிலே இருக்க வேண்டுமென்றும், இரண்டாவது பெயர் இந்தியிலே இருக்க வேண்டுமென்றும், மூன்றாவது பெயர் ஆங்கிலத்திலே இருக்க வேண்டுமென்றும் இந்தப் பெயர்ப் பலகைகளை அந்த வகையிலே வைத்திருக்கிறோம் என்றும் தமிழகத்தைப் பொறுத்த வரையில் தமிழுக்கு உரிய இடம் தரப்படுவதை ராணுவம் எப்போதும் மதித்து வருகிறது என்றும், அதிலே எந்த ஒரு வித்தியாசமும் இல்லை என்றும், அதிலே சந்தேகிப்பதற்கே இடம் இல்லை என்றும், அப்படிப்பட்ட சந்தேகங்கள் ஏற்படுத்துகிற அளவுக்கு இருந்ததற்காக வருந்துகிறோம் என்றும், ஆனால் அத்தகைய நிலை, அந்தக் கருத்து, இராணுவத் துறையில் இருப்பவர்களுக்கு யாருக்கும் இல்லை என்றும், அதுவும் கூட 18ஆம் தேதி எழுதப்பட்டு விட்டது என்றும், 3 பகுதிகளில் இருக்கிற அந்த 6 போர்டுகளும் மறுபடியும் திருத்தி எழுதப்பட்டு முடிந்து விட்டன என்றும் கூறி அந்த 6 படங்களையும் எடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அதிலே ஐயப்படுவதற்கோ, அல்லது வேறு வகையிலே சந்தேகிப்பதற்கோ, அல்லது அப்படி எண்ணுவதற்கோ கூட இடம் இல்லை

என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆக, அதிலே வேறு வித மான ஆட்கள் உள்ளார்கள் என்றோ, தமிழ் அழிக்கப்பட்டது என்றோ நினைக்கத் தேவையில்லை என்பதை இந்த அவை யிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 5. அரசினர் தீர்மானம்.

### விதி 33-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மா னத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமன தாக நிறைவேற்றப் பெற்றது.

### 6. அறிவிப்புகள்.

**(அ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (சிறப்புவகை முறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு, 1986 (ஆ. இ.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறி விப்பு. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (சிறப்பு வகை முறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசை வைத் தெரிவித்துள்ளார்.

### 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

**(அ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (சிறப்பு வகைமுறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1986.**

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (சிறப்பு வகை முறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.